# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை – 2018 / 2019
தமிழ்மொழி

ஆண்டு: 3 நேரம்: 2.00
சுட்டெண்: ........................

பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) பின்வரும் சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

சுத்தமாக, வாசம், மேடை, செய்தித்தாள்கள், வானொலி.

அ) வடையின் ......................................... காகத்தின் மூக்கைத் துளைத்தது.
ஆ) அறிவை வளர்த்துக் கொள்ளச் ........................................................... உதவுகின்றன.
இ) நாம் நமது உடலைச் ........................................... வைத்திருப்பது அவசியம்.
ஈ) மைதானத்தின் நடுவில் ஒரு அழகிய .......................................... அமைக்கப்பட்டிருந்தது.
உ) ................................................. மூலம் செய்திகளை உடனுக்குடன் அறியலாம்.

2) பின்வரும் வசனங்கள் சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( ✕ ) எனவும் அடையாளமிடுக.

அ) உழவர்கள் கோடை காலத்தில் வேலையை ஆரம்பிப்பார்கள். ( )
ஆ) அதிபரும் சிறுவர்களும் மேடையை விட்டு இறங்கினர். ( )
இ) நாம் சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். ( )
ஈ) அழுத பிள்ளை பால் குடிக்காது. ( )
உ) கம்பியில்லாத் தந்தியனுப்பும் முறையை மார்க்கோனி கண்டுபிடித்தார். ( )

3) பின்வரும் கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற எதிர்ப்பாற் (ஆண்பால் - பெண்பால்) சொற்களை எழுதுக.

| | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|
| அ) | இடையன் | ................................ |
| ஆ) | .................................. | ஆசிரியை |
| இ) | தம்பி | ................................ |
| ஈ) | .................................. | மாதா |
| உ) | சிறுவன் | ................................ |

4) பின்வரும் சொற்களின் எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுக.

அ) தண்ணீர் ........................................................
ஆ) இக்கரை ........................................................
இ) ஏற்றம் ........................................................
ஈ) ஞாபகம் ........................................................
உ) ஒற்றுமை ........................................................

5) பின்வரும் சொற் தொகுதியில் வேறுபட்ட சொல்லின் கீழ்க் கீறிடுக.

அ) விமானம், கப்பல், தோணி, வள்ளம்.
ஆ) வருகிறது, ஓடுகிறது, நடக்கிறது, பாய்ந்தது.
இ) மதி, நிதி, சந்திரன், திங்கள்.
ஈ) புறா, கிளி, மைனா, பூனை.
உ) இடியப்பம், வடை, பிட்டு, தோசை.

6) அடைப்புக் குறிக்குள் உள்ள சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

அ) மழை பெய்தால் (வெய்யில், மண், விண், நெருப்பு) குளிரும்.
ஆ) எங்கள் எல்லோருக்கும் ஒரே (மகிழ்ச்சி, மகிள்ச்சி, மகில்ச்சி, மகிழ்சி)
இ) நரி தந்திரத்தால் காகத்தை (ஏமாற, ஏமாற்ற, ஏமாறி, ஏமாற்றி) நினைத்தது.
ஈ) தபால் + பெட்டி என்ற சொல்லைச் சேர்த்தெழுதுக. ....................................................
உ) அறிவுரை என்ற சொல்லைப் பிரித்தெழுதுக. .......................... + .................................

7) அடைப்புக் குறிக்குள் உள்ள மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

அ) மாமா பாடம் சொல்லித் தந்தார். இவ்வாக்கியத்தின் எழுவாய்
(மாமா, பாடம், சொல்லி, தந்தார்)
ஆ) நான் பாடசாலை விடுமுறைக்கு கனடா செல்வேன். இவ் வாக்கியம் காட்டும் காலம்
(இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்)
இ) நாங்கள் தைப்பொங்கல் விழாவிற்கு சென்றோம். இந்த வாக்கியத்தின் பயனிலை
(நாங்கள், தைப்பொங்கல், விழா, சென்றோம்)
ஈ) நண்பன் என்ற சொல்லின் பன்மைச் சொல்லை எழுதுக. ................................................
உ) நிறங்கள் என்ற சொல்லின் ஒருமைச் சொல்லை எழுதுக. ..............................................

8) பின்வரும் சொற்கள் மாறியமைந்துள்ளன. ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுக.

அ) கண்டுபிடித்ததால் / வானொலியைக் / உலகப் / பெற்றார் / மார்க்கோனி / புகழ்.

..............................................................................................................................................

ஆ) தண்ணீர் / அருகே / கொண்டு / பீர்பாலின் / வந்தான் / வீரன்.

..............................................................................................................................................

இ) நெல்லை / கொண்டு / சுத்தப்படுத்திய / செல்வார்கள் / வீட்டுக்குக்.

..............................................................................................................................................

ஈ) பந்தலுக்கு / கொண்டு / மரக்குற்றியைப் / அருகில் / வந்தது / நரி.

..............................................................................................................................................

உ) தலைவனைக் / மறிக்கும் / கிளி / என்பார்கள் / அணியின்.

..............................................................................................................................................

# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2018 / 2019
தமிழ்மொழி

ஆண்டு: 3

பகுதி 2

முதலாவது வினாவிற்கும், மேலும் ஒரு வினாவுக்குமாக இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1) பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி ஆறு ( 6 ) வசனங்கள் எழுதுக.

அ) உழவுத்தொழில்
ஆ) கணனி
இ) திருக்குறள்
ஈ) பாடசாலை
உ) அப்பா

2) உமக்கு விருப்பமான உணவு பற்றி எழுதுக.

3) உலகநாதர் அருளிய உலக நீதியில் ஐந்து (5) எழுதுக.

2) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பெரியவர் "சிறுவர் உரிமைகள்'' பற்றிப் பேசினார். "பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டும். பிள்ளைகளை யாரும் துன்புறுத்தக் கூடாது. பிள்ளைகளைக் கல்வி கற்க விடாது வேலைக்கு அமர்த்துவது குற்றமாகும்'' எனப் பேசினார். அவரது பேச்சு எமக்கு உற்சாகத்தைத் தந்தது.

அதிபரும் பெரியவரும் மேடையை விட்டு இறங்கினர். நாம் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்தனர். அப்போது நாம் வட்ட வடிவமாக மைதானத்தில் நின்றோம். அவர்கள் இருவரும் எம் ஒவ்வொருவர் அருகிலும் வந்து ``நன்றாகப் படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்`` எனக் கைகுலுக்கி வாழ்த்தினர்.

அ) பெரியவர் எது பற்றிப் பேசினார்?
ஆ) அதிபரும், பெரியவரும் என்ன கூறி வாழ்த்தினர்?
இ) பிள்ளைகள் என்ன செய்ய வேண்டும்?
ஈ) குற்றம் எது?
உ) பிள்ளைகளை என்ன செய்யக் கூடாது?